## சட்டப் பேரவையில் தனி மனிதத் தாக்குதலைத் தொடங்கி வைத்தவர் இன்றைய முதலமைச்சர் என்பது வருத்தத்திற்குரியது!

## தமிழ்நாடு சட்டசபைக்கென்று ஒரு மாண்பு இருக்கிறது! ஆளுங்கட்சியினர்

# மக்கள் பிரச்சினைகளை திசை திருப்பினால், எதிர்க்கட்சிகள் அனுமதிக்கக் கூடாது!

## ‘மின்னம்பலம்’ இணையதள தொலைக்காட்சிக்கு – மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் சிறப்புப் பேட்டி!

**சென்னை, ஆக. 26 -**

**சட்டப் பேரவையில் தனி மனித தாக்குதலை தொடங்கி வைத்தவர் இன்றைய முதலமைச்சர் என்பதை வருத்தத்துடன் பதிவு செய்கிறேன். சட்டசபைக்கென்று ஒரு மாண்பு இருக்கிறது. ஆளுங்கட்சியினர் மக்கள் பிரச்சினைக்கான விவாதங்களை திசை திருப்பினால், அதை எதிர்க்கட்சிகள் அனுமதிக்கக் கூடாது என்று மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ், ‘மின்னம்பலம்’ இணைய தள தொலைக் காட்சிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் குறிப்பிட்டார்.**




மின்னம்பலம் இணையதள தொலைக்காட்சியில், மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ், தொலைக்காட்சியின் இணை ஆசிரியர் திருமதி கலைச் செல்வி சரவணனுக்கு சிறப்புப் பேட்டியளித்த காட்சி!

மின்னம்பலம் இணைய தள தொலைக் காட்சிக்கு மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் அளித்த சிறப்பு பேட்டி வருமாறு:-

**நெறியாளர்:–** சட்டப் பேரவை நிகழ்வுகளைப் பார்த்து செய்திகளைக் கொடுப்பதில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக உங்களுக்கு ஒரு அனுபவம் இருக்கிறது. இப்போது இருக்கின்ற சட்டப் பேரவை நிகழ்வுகளைப் பார்க்கும் போது உங்களுக்கு உடனே தோன்றுவது என்ன?

**துக்ளக் ரமேஷ்:–** ஆரோக்கியமான முறையில் விவாதம் நடைபெற வேண்டும் என்று பெரும்அளவிற்கு பேரவைத் தலைவர் ஜெ.சி.டி.பிரபாகர் அக்கறை செலுத்துகிறார். பெருமளவில் நடுநிலையோடு நடந்து கொள்கிறார் என்று கூடக் கூறலாம். ஆனால் அவர் விரும்புகிற மாதிரி விவாதங்கள் ஆரோக்கியமாக கொண்டு செல்லப்படுகின்றனவா என்று கேட்டால் பல நேரங்களில், அவ்வாறு நடைபெறவில்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தை சீண்டுவதில் சில அமைச்சர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். அது ஒரு நல்ல போக்கு அல்ல. சபையில் அமைதி நிலவுவதற்கு அது உதவாது. பெரிய அமளி ஏற்படக் கூடிய, அல்லது ஏற்பட்டிருக்கக் கூடிய தருணங்களில் ஏற்படாததற்குக் காரணம் அந்த பேரவை நிகழ்ச்சிகள் நேரலையில் போய்க்கொண்டு இருப்பது தான். அது ஓரளவு உறுப்பினர்களின் மனதில் அது இருக்கிறது. அது ஓரளவு கட்டுப்படுத்துகிறது. சபாநாயகர் அமைச்சர்களுடைய பேச்சையே நீக்குகிறார். இவ்வாறு அமைச்சர்கள் பேச்சை நீக்கப்படுவது குறித்து முதலமைச்சர் கவனிக்க வேண்டும்.

முதலமைச்சர் ஒன்றிரண்டு தருணங்களில் சபையில் இருந்திருக்கிறார். அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டபோது சபையில் இருந்திருக்கிறார். ஆனால் அவர் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் அறையில் இருந்து கேட்க முடியும், பல அமைச்சர்களின் அறைகளுக்கு இந்த ஸ்பீக்கர் வசதி இருப்பதை பார்த்திருக்கிறேன். அங்கே இருந்தே சபையின் நடவடிக்கைகளை கேட்டுக் கொண்டு இருக்க முடியும்.

### அமைச்சர்களுக்கு அறிவுரை கூற வேண்டும்!

அலுவல் விஷயமாக மாடிக்கு போவார்கள். கீழே பேரவையில் ஒரு அமளி நிலவுகிறது, இல்லை தங்கள் துறைசார்ந்த விமர்சனங்கள் வைக்கப்படுகிறது என்றால் உடனடியாக வேகமாக கீழே இறங்கி வருவார்கள். முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள் கூட இருக்கலாம். ஆனால், தன்னுடைய கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், அதுவும் மூத்தவர்கள் ஒன்றிரண்டு பேர் சபைக் குறிப்பில் இருந்து வார்த்தைகள் நீக்கப்படுகின்ற அளவிற்கு, அந்த மாதிரியான சபைக்குத் தேவையற்ற கருத்துகளை பரிமாறுகிறார்கள், பேசுகிறார்கள் என்பது குறித்து குறைந்தபட்சம் அறையில் அழைத்தாவது அறிவுரைகூற வேண்டும். அப்படி அறிவுரை கூறுவதாகத் தெரியவில்லை.

**நெறியாளர்:–** என்னை புகழாதீர்கள் என்று சொல்கிறாரே?

**துக்ளக் ரமேஷ்:–** அது காலதாமதமாகச் சொன்னார். நான் என்ன சொல்கிறேன். இந்த வார்த்தைகள் அமைச்சர் நிர்மல் குமார், கரூர் கம்பெனி என்று சொல்கிறார். பிறகு எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து பாத்ரூமில் இருந்தவர் என்று சொல்கிறார். இதுவெல்லாம் என்ன மாதிரியான வார்த்தைகள் சபைக்குத் தேவையான வார்த்தைகளா?

பொதுக்கூட்டத்தில் பேசுகின்ற மாதிரி சட்டசபையில் பேசிக் கொண்டு இருந்தால் என்ன அர்த்தம். அதற்குத்தான் இவர்கள் வந்து இருக்கின்றார்களா என்று எனக்குப் புரியவில்லை. எனக்கு ஒரு வகையில் எலக்சன் மூடில் இருந்து வெளியே வரவில்லையோ என்றுதான் தோன்றுகிறது.

### வார்த்தை மோதலை தொடங்கியவர் முதல்வர்!

முதலமைச்சரில் தொடங்கி, நான் சொல்வதற்கு வருத்தப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய பதவிக்குரிய வகையில் பேசாமல், முன்னாள் முதலமைச்சரை வீண் வம்புக்கு இழுத்து சட்டசபையில் அப்பாவைக் காணோம் என்று ஆரம்பித்தது வார்த்தை மோதல், வார்த்தைப்போர்! தனி மனித தூற்றுதல், தனி மனிதத் தாக்குதல். அதனை தொடங்கி வைத்தவர் இன்றையத் முதலமைச்சர் என்பதை நான் வருத்தத்தோடு பதிவு செய்தே ஆக வேண்டும்.

நீங்கள் சட்டசபையில் போய் அப்பாவைக் காணோம் என்பது, பொதுக்கூட்டத்தில் போய் நன்றாக வைச்சு செய்து விடுங்கள் என்பது, கொளத்தூரில் கொத்து பரோட்டா போட்டார்கள் என்பது, அப்படி கைத்தட்டல் வாங்குவது, முதலமைச்சரே பேசுகிறார் என்பது என்ன மாதிரியான வழி முறை காட்டுகிறீர்கள். உங்களுக்கு கீழே இருக்கின்ற அமைச்சர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் உங்களோடு போட்டி போட வேண்டும் என்று நினைக்கிறார்கள். தி.மு.க.வை வம்புக்கு இழுக்கிறார்கள். அல்லது தி.மு.க.வை விமர்சித்து உங்களோடு போட்டி போட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

**நெறியாளர்:–** சட்டசபைக்கென்று ஒரு மாண்பு இருக்கிறது என்பது தெரியுமா? தெரியாதா?

**துக்ளக் ரமேஷ்:–** நான் என்ன சொல்கிறேன்; சட்டசபைக்கென்று ஒரு மாண்பு இருக்கிறது என்பதை உணர்ந்து முதலில் நடந்து கொள்ள வேண்டியது ஆளுங்கட்சி, ஆளுங்கட்சி வீண் வம்புக்குப் போகுமானால் நாமும் மக்களால் நாம் கவனிக்கப்படுகிறோம் என்பதை உணர்ந்து வார்த்தைகளை பயன்படுத்த வேண்டியது எதிர்க்கட்சி. ஆனால் துரதிருஷ்டவசமாக த.வெ.க.வுக்கும் தி.மு.க.வுக்குமான பகை என்பது சட்டசபைக்கு வெளியே இருந்தது போய், சட்டசபைக்கு உள்ளேயும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதை கவலையோடு கவனித்து தடுக்கிற முயற்சியை ஜெ.சி.டி.பிரபாகர் ஈடுபடுகிறார். இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

### மிரட்டிக் கொண்டு இருக்காதீர்கள்! நடவடிக்கை எடுங்கள்!

ஆகவே முதலமைச்சர் அவர்களுக்கு கூடுதல் பொறுப்பு இருக்கிறது. நீங்கள் காரணமே இல்லாமல் சட்டசபையில் என்ன செய்கிறீர்கள். மூன்று பைல்கள் டேபிளில் இருக்கிறது என்று சொல்கிறார். தணிக்கை செய்யப்பட்டு எந்தத் துறையில் என்ன முறைகேடு என்கிற மாதிரி, இது என்ன ஆகிறது. நேரலையில் போகிறது. அன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவையில் இல்லை. அதாவது அந்தக் கூற்று சொல்லப்படுகின்ற சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக் கூடிய உதயநிதி அவர்கள் எழுந்து இப்படி எல்லாம் மிரட்டிக் கொண்டு இருக்காதீர்கள், கையில் இருந்தால் நடவடிக்கை எடுங்கள், சட்டப்பூர்வமாக சந்திப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்.

எனக்கு அந்தக் கேள்வி, இன்றைக்கு உதயநிதி எழுப்பினார். நான் நேற்றைக்கு கேட்டேன், மாண்புமிகு முதலமைச்சர் பேரவை மிரட்டுவதற்கான இடமில்லை. நீங்கள் மிரட்டுவதற்காக தலைவரல்ல. நீங்கள் அரசமைப்பு சட்டப்படி ஒரு முக்கியமான பொறுப்பில் இருக்கிறீர்கள். இந்த மாநிலத்தின் முதலமைச்சர், இந்த மாநிலத்தின் போலீஸ் உங்கள் கையில் இருக்கிறது. நீங்கள் சட்டப்பூர்வமாக முறைகேடு என்று தெரிந்தவுடன் அதனை ஊறப்போட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். அப்படி என்றால் என்ன அரசியல் செய்கிறீர்களா? என்றார்.

**நெறியாளர்:–** அப்படித்தான் அந்தப் பைலை எப்போ நான் ஓபன் செய்யணுமோ அப்போது ஓபன் செய்வேன் என்கிறாரே?

**துக்ளக் ரமேஷ்:–** அதுதான் எனக்குப் புரியவில்லை. இதேமாதிரி இடைத் தேர்தல் வருகிறது அல்லவா என்கிறார். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம். எனக்குப் புரியவில்லை. ஒரு வேளை அந்த ஊழல் சம்பந்தப்பட்ட மாஜிக்கள் இரண்டு மூன்று பேர் உங்கள் கட்சியில் வந்து இணைந்திருக்கிறார்களே, அவர்களுடைய கோப்பு அதில் இருக்கிறதா என்ற சந்தேகம் எனக்கு வருகிறது. யாருடைய கோப்பு. அது தி.மு.க.வினுடைய கோப்பா, அ.தி.மு.க.வினுடைய கோப்பா?

**நெறியாளர்:–** கடந்த ஆட்சியிலே செயல்பட்ட மூன்று துறைகளுடைய கோப்புகள் என் மேஜை மீது இருக்கிறது. அப்படி என்றால் தி.மு.க. பைல்ஸ் தான் அது.

**துக்ளக் ரமேஷ்:–** தி.மு.க. பைல்ஸ் தான் அண்ணாமலை வெளியிட்டார். நீங்கள் வெளியிடுங்க. வெளியிடக் கூடாது, அண்ணாமலையாவது எதிர்க்கட்சியாக இருந்தார், மத்திய அமைப்பில் கொடுத்து இருக்க வேண்டியதுதானே அப்படி என்ற கேள்வியையெல்லாம் எதிர்கொண்டார். ஒரு இரண்டு விசயங்கள் ஒன்றிய அரசுக்கு போய் இருக்கிறது என்று அவர் சொன்னார். ஆனால் இவர் நடவடிக்கை எடுக்கக் கூடிய இடத்தில் இருக்கிறார்.

எதற்காக நான் சொல்கிறேன் என்றால், நீங்கள் நடவடிக்கை எடுத்துட்டுப் போங்க, சட்டசபையில் எதற்குப் பேசுகிறீர்கள். ஆகவே லாவணிய அரசியல் என்று இதைத்தான் சொல்வார்கள். நீங்கள் ஒன்று சொல்வது, பதிலுக்கு அவர்கள் ஒன்று சொல்வது இதுதான் போயிட்டு இருக்கிறது. வெளியில் என்ன வென்றாலும் செய்து கொள்ளுங்கள். வெளியே அவர்அவர் வகிக்கின்ற பதவிக்கு பொருத்தமாக பேசுவதாகவே இல்லை.

### கண்ணியமற்றுப் பேசுவதை முதல்வர் தவிர்ப்பது நல்லது!

அது முதலமைச்சராகட்டும், அல்லது எதிர்க்கட்சித் தலைவராகட்டும் எனக்குத் தெரிந்து மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்ணியமற்ற முறையில் பேசியது கிடையாது. பொது வெளியில், குறிப்பாக சட்டமன்றத்தில். நீங்கள் மறைமுகமாகப் பேசுவது வேறு நேரிடையாகப் புண்படுத்துகின்ற வகையில் ஒரு கட்சியை சீண்டுகின்ற வகையில் பேசுவது என்பது வேறு. அதனை முதலமைச்சர் அவர்கள் இனிமேலாவது தவிர்ப்பது. கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் குறிப்பாக ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார் போன்றவர்களுக்கு அறிவுரையைக் கூற வேண்டும் என்று ஒரு ஊடகவியளாலராக, சட்டசபையை நீண்ட காலம் பார்த்துக் கொண்டிருக்கின்றவன் என்கிற முறையில் கண்ணியமான விவாதங்களை எல்லாம் பார்த்தவன் என்கிற முறையில் அவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

**நெறியாளர்:–** இந்த இடத்தில், அமைச்சர்கள் பேசுவதையும், தி.மு.க.வை சீண்டு வதையும் முதல்வர் விஜய் அவர்கள் ரசிக்கிறாரா, நீங்கள் கட்டுப் படுத்தவேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் அவர் ரசிக்கிறாரா, இதனையே ஊக்குவிக்கிற மாதிரி இருக்கிறதா?

**துக்ளக் ரமேஷ்:–** ரசிக்கிறார். அவர் இருந்தால் ரசிக்கிறார். அவர்கள் பதிலுக்கு கத்துகிறார்கள். பதிலுக்கு எழுந்து ஒரு பதிலை சொல்கிறார்கள். இவர்கள் சொல்வதும் நீக்கப்படுகிறது. அவர்கள் சொல்வதும் நீக்கப்படுகிறது. இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து கேட்டார். நீங்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது என்று சொல்கிறீர்கள், அது 900 கோடி ரூபாய் விவகாரமாகட்டும், பாத் ரூம் விவகாரமாகட்டும், கரூர் கம்பெனி ஆகட்டும், இல்லை, இவர்களைப் பற்றி அவர்கள் செய்த விமர்சனம் ஆகட்டும், அவற்றை சபையில் பேரவைத் தலைவர் அந்த நிமிடம் நீக்கி விடுகிறார். லைவில் லட்சக்கணக்கான மக்கள் பார்க்கிறார்கள், என்ன செய்வீர்கள். அவர்கள் நினைவுக் குறிப்பில் இருந்து அழிப்பீர்களா, இது என்ன அபத்தமாக இருக்கிறது என்று அவர் கேட்கிறார்.

### ஆரோக்கியமான விவாதம் நடைபெற வேண்டும்!

அதை எப்படி, இன்றைக்கு அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். இன்றைக்கு அவர்கள் இஸ்டத்திற்கு பேசிவிடுவார்கள், நீங்கள் சபைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன் என்பீர்கள். பேப்பரில் போடாமல் இருப்பார்கள், பேப்பரில் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்டதை போடக்கூடாது. டி.வி.யில் ஓடிவிடுதே. முக்கால்வாசி டி.வி. நேரலையில் இருக்கிறார்களே. ஒருத்தரை ஒருத்தர் திட்டிக் கொள்கிறார்கள். இதனை ஜாலியாகப் பார்க்கலாம் என்று பார்க்கிறார்கள். இதற்கு நடுவில் பாட்டு பாடிக் கொள்கிறார்கள். அதனால் தான் எதிர்க்கட்சித் தலைவர் நக்கலாக சொன்னார். என்ன சூப்பர் சிங்கரா என்று கேட்டார்.

இந்தப் போக்கை கைவிட்டு, ஆரோக்கியமான விவாதம் நடைபெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுங்கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கும், அமைச்சர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய உறுப்பினர்களுக்கும் அறிவுரை கூறினால்தான் மக்கள் வரிப்பணம் வீணாகாமல் சட்டமன்றம் பயனுள்ள வகையில் நடைபெறும்.

மக்கள் வரிப்பணம் வீணாகுவதற்கு என்ன செய்யவேண்டுமோ அதனை யெல்லாம் செய்து கொண்டு இருக்கிறார்கள். எம்.எல்.ஏ.க்களுக்கு கார் கொடுக்கிறேன் என்று இரண்டு நாட்களுக்கு முன்பு அனோன்ஸ்மெண்ட் வந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர், எங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கு கார் தேவை இல்லை என்று அவர் முடிவெடுத்து இருக்கிறார். அன்றைக்கே யாருக்கு கார் இல்லையோ அவர்களுக்கு மட்டும்தான் கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ். கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த அறிவிப்புக்கு எதிர்ப்பை தெரிவிக்காதது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

**நெறியாளர்:–** இன்றைக்கு வேண்டாம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

**துக்ளக் ரமேஷ்:–** இன்றைக்கு இல்லை. அன்றைக்கு உடனே எதிர்ப்பை தெரிவித்து இருக்க வேண்டும். ஏனென்றால், முந்தைய காலங்களில் கம்யூனிஸ்ட் கட்சிகள் சம்பளம் உயர்வுக்கே எதிர்ப்பு தெரிவிப்பார்கள், எம்.எல்.ஏ.க்களுடைய சம்பளம் ஒவ்வொரு கால கட்டத்திலும் உயர்த்திக் கொண்டே வந்திருக்கிறது. இன்றைக்கு ஒரு லட்சத்து ஐந்தாயிரம் ரூபாய் வந்திருக்கிறது. இன்றைக்கு அடிசனலாக புதியதாக ஒரு லட்சத்துக்கு மேல் புதிய செலவு . பெட்ரோல் செலவு, உதவியாளர் செலவு, பயணப்படிகள் , உதவியாளர்க்கு 25 ஆயிரம் ரூபாய் என்று ஏற்றி இருக்கிறார். உதவியாளர் இருக்க வேண்டும். ஏனென்றால் எம்.எல்.ஏ. போய் டைப் அடித்து வர முடியாது, எம்.எல்.ஏ.போய் எல்லா வேலையும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது.

### முன்யோசனை இல்லாத முதலமைச்சர்!

எம்.எல்.ஏ. ஆபிஸ் வைத்து இருக்கிறார்கள். எம்.எல்.ஏ. அலுவலகம் வைத்து இருக்கிறார்கள். அவரே போய் ஆபிஸை துடைத்துக் கொண்டு எல்லாம் இருப்பாரா? அதற்கென்று ஒரு பணியாளர் தேவை, அதனை ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால், முக்கால் வாசி எம்.எல்.ஏ.க்களுக்கு சொந்தமாக கார் இருக்கிறது. எண்பது, தொண்ணூறு எம்.எல்.ஏ.க்களுக்கு சொந்தக் கார் இருக்கிறது. அத்தனை பேருக்கும் கார் என்ற அறிவிப்பை எப்படி கொஞ்சம் கூட முன் யோசனை இல்லாமல் முதலமைச்சர் வெளியிட்டார் என்று நான் கேட்கிறேன்.

இன்றைக்கு ஆதவ் அர்ஜுனா எழுந்திருச்சு, தி.மு.க.காரர்கள் சொன்ன உடனே உசாராகி நாங்களும் எல்லோரும் வாங்கிக் கொள்ள மாட்டோம், எங்களில் எல்லோருக்கும் கேட்கவில்லை. யார் யாருக்கு கார் இல்லையோ அவர்களுக்குத்தான். முதலமைச்சர் அறிவிப்பின் போதே என்ன, குறைந்த பட்சம் அதிகாரிகளாவது ஒழுங்காக, இந்த முடிவை எடுத்து, ஒழுங்காக டைப் செய்து கொடுத்து இருக்க வேண்டும். கார் இல்லாத எம்.எல்.ஏ.க்களுக்கு கார் தரப்படும், அப்படி என்று சொல்லி இருந்தால், அந்த அறிவிப்பு இத்தனை சர்ச்சைகளை தோற்றுவித்து இருக்காது.

**நெறியாளர்:–** த.வெ.க. அரசின் அந்த நகர்வு என்பதே ஒரு விஷயத்தை வெளியிலே விடுவது, அதற்கு என்ன சர்ச்சைகளோ, கருத்துகளோ வந்ததற்குப் பிறகு இவர்கள் அதனையொட்டி ஒரு முடிவு எடுப்பது என்று இருக்கிறதா, இந்த ஆட்சி அமைந்த உடனேயே இப்படித்தான் ஒவ்வொரு முடிவு களும் இப்படியே நகர்கிறது. அந்த வகையில் தான் இதனையும் பார்க்கிறதா, வெளியில் விட்டு விடுகிறார்கள். பிரச்சினை ஆன உடனேயே மாற்றிக் கொள்கிறார்களா?

### டெல்லி பிரதிநிதி தமிழ்நாட்டை சேர்ந்தவரா?

**துக்ளக் ரமேஷ்:–** ஒரு முடிவான, ஆரோக்கிமான விவாதம் கலந்தாலோசனை நடைபெறவில்லையோ என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. முதலமைச்சர் அல்லது முதலமைச்சர் பக்கத்தில் இருக்கிற ஒன்றிரண்டு பேர் இவர்களுடைய விருப்பங்கள் அல்லது அறிவுரைகள் விவாதிக்கப்படாமல் திணிக்கப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகிறது. நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. சில நியமனங்கள் சர்ச்சையை ஏற்படுத்திய பிறகு திரும்பப்பெறப்படுகின்றன. சில நியமனங்கள் சர்ச்சையை ஏற்படுத்திய பிறகு திரும்பப்பெறப் படவில்லை. முதலமைச்சருக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் பதவி கொடுக்கப்படுகிறது. நீங்கள் என்ன மாற்று இதில். கட்சிக்காரர்களுக்குப் பதவி கொடுப்பது, அல்லது வேண்டியவர்களுக்குப் பதவி கொடுப்பது தி.மு.க.வில் செய்தார்கள், அ.தி.மு.க.வில் செய்தார்கள் என்று விமர்சனம் செய்தார்கள். இப்போது அதையே தான் த.வெ.க.வும் செய்கிறார்கள் என்று நான் கேட்கிறேன். ஜோசியருக்கு பதவி கொடுத்தார்கள். படத் தயாரிப்பாளர் அவர் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவரே அல்ல, அவருக்கு தமிழக அரசினுடைய டெல்லி பிரதிநிதி. தமிழ்நாட்டினுடைய முக்கியமான கோரிக்கைகள் என்ன என்பதை தெரிந்து கொண்டு அங்கே இருக்கக் கூடிய அமைச்சர்களிடம் தொடர்பு கொண்டு அதனைப் பாலோப் பண்ணுகின்ற வேலை என்ற முக்கியமான வேலை டெல்லி பிரதிநிதியின் வேலை.

அதில் முதலமைச்சர் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்ற போக்குதான் அதில் வெளிப்பட்டதே தவிர, உரியவரை, சிந்தித்து உரியவருக்கு அந்த வாய்ப்பை அளிப்போம் என்று சிந்தித்த மாதிரி தெரியவில்லை. அதே மாதிரி ரூட்டு ஜெகதீஷ், முதலமைச்சருடன் சுற்றிக் கொண்டு இருந்திருப்பார். முதலமைச்சருக்கு வேண்டியவர். அவருக்கு ஒருசிறப்பு உதவியாளர்ன்னு போட்டு, பத்து நாளா அந்த ஆர்டரை வெளியே விடாமல், அதனை வெளியே விட்டபோது பார்த்தால் அந்த ஆர்டர் பத்து நாள் முன்பே போடப்பட்டு இருக்கு.

### இது மாற்றம் அல்ல; ஏமாற்றம்!

இந்த மாதிரி ரகசியத்தை ஏன் பேணி காக்க வேண்டி இருக்கு. இதில் ரகசியம் என்ன இருக்கு. தேர்தலில் தோற்றவருக்கு நகர மேம்பாட்டு வாரியப் பதவி, தொகுதி பொறுப்பாளராக இருந்தவருக்கு வீட்டுவசதி வாரியத் தலைவர் பதவி, கட்சி பேச்சாளருக்கு பாடநூல் தலைவர் பதவி, நாங்கள் மாற்றத்தைக் கொடுத்து இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளாதீர்கள். இதுமாற்றம் அல்ல ஏமாற்றம் என்று தான் மக்கள் பார்ப்பார்கள். அதிருப்தி வர மாதிரியான சில விஷயங்களை செய்ய ஆரம்பித்து இருக்கிறார்கள். சொத்துவரியை திடீர்ன்னு பல மடங்கு உயர்வு, ஒரே இரவில். மக்கள்மேல் அதிரடி தாக்குதல் மாதிரி. பிறகு அதனை வாபஸ் வாங்குவது. குறைந்த பட்சம் மாநகராட்சி மேயர், துணை மேயர் அவர்களுக்கு அறிவிக்கப்படாமல், நிலைக்குழு கூட்டப்படாமல் திடீர் என்று அதிரடியாக மாநகராட்சி ஆணையாளர் சொத்துக்களை மறு மதிப்பீடு செய்தோம். அதன் அடிப்படையில் இந்த உயர்வு செய்யப்பட்டது. இப்போதைக்கு விலக்கிக் கொள்ளப்படுகிறது என்று கூறினார். இப்படி ஒவ்வொன்றாக அறிவிப்பார்கள், பிறகு திரும்பப் பெறுவார்களா?

**நெறியாளர்:–** இவையெல்லாம் திசை திருப்புகிற மாதிரி இருக்கிறதா? இவ்வளவு பெரிய பிரச்சினை மக்களுடைய பிரச்சினை இவையெல்லாம் வெளியில் விவாதிக்கப்படாமல், வெளியே பேசப்படாமல் வேறு விதமாக இன்றைக்கு சட்டப் பேரவையில் தி.மு.க.வை சீண்டுவது வருகிறது, முன் வரிசையில் நடிகை உட்கார்ந்து இருக்காங்க என்பது வருது, இந்த மாதிரிதான் வெளியில் விவாதிக்கப்படுகிறதா?

**துக்ளக் ரமேஷ்:–** அந்த விவாதங்கள் திசை திருப்பப்படுகிறதா என்பது வேறு விஷயம். எதிர்க்கட்சிகள் அதனை திசை திருப்புவதற்கு அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் துக்ளக் ரமேஷ் பேட்டியளித்தார்.